**கல்வியாண்டின் இடையில் ஓய்வு பெறும் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு கல்வியாண்டின் இறுதி வரையில் மறு பணிநியமனம் வழங்கலாம் அரசாணை**

சுருக்கம்

பள்ளிக்கல்வி – கல்வியாண்டின் இடையில் வயது முதிர்வில் ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு மாணவர்களின் நலன் கருதி கல்வியாண்டின் இறுதி வரையில் மறு பணிநியமனம் ( re employment) வழங்கும் போது ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வராத ஆசிரியர்களுக்கு அவர்கள ஓய்வு பெறுவதற்கு முன்னர் கடைசியாக பெற்ற ஊதியத்தை மறுபணி நியமன காலத்திற்கான ஊதியமாக வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது,

**பள்ளிக் கல்வித் (பக5(2)) துறை**

**அரசாணை நிலை எண் 170** **நாள் 23–10–2014**

**படிக்கப்பட்டவை**

1) அரசாணை (நிலை) எண் 249 மக்கள் நலம் கல்வி (ம) உள்ளாட்சி நிர்வாகம் துறை (கல்வி) நாள் 09–02–1959

2) அரசாணை (நிலை) எண் 1643 கல்வி துறை நாள் 27–10–1988

3) பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித எண் 78551/சி5/இ3/2013 நாள் 03–01–2014

**ஆணை**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கல்வியாண்டின் இடையில் வயது முதிர்வின் காரணமாக ஆசிரியர்கள் பணியில் இருந்து ஒய்வு பெறும் போது ஆசிரியர்களின்றி மாணவர்களின் கல்வி நலன் பாததிக்கப்படக்கூடாது என்பதைக் கருத்திற்கொண்டு, இத்தகைய ஆசிரியர்களுக்கு கல்வியாண்டின் இறுதி வரையில் கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் மறுநியமனம் வழங்குவதற்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

1) ஆசிரியர் பண்பு மற்றும் நடத்தை திருப்திகரமாக இருத்தல் வேண்டும்
2) தொடர்ந்து பணிபுரியும் வகையில் உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும்

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் இத்தகைய ஆசிரியர்களின் ஒய்வூதியம் சார்ந்த கருத்துருக்கள் பணியிலிருந்து ஒய்வு பெறும் ஒராண்டிற்கு முன்னர் மாநிலக் கணக்காயருக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும் எனற் கூடுதல் நிபந்தனையை மூன்றாவது நிபந்தனையாக விதிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பள்ளிக்கல்வி இயக்குநர் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் 2003 ஆம் ஆண்டு முதல் பங்களிப்பு ஒய்வூதிய திட்டம் (Contributory Pension Scheme) நடைமுறைக்கு வந்துள்ளதால், ஏற்கனவே நடைமுறையிலிருந்த ஒய்வூதிய விதிகளில் உள்ளது போன்று மாந்திர ஒய்வூதியம் பெற இவர்கள் தகுதி இல்லாததால் இவர்கள் சார்பில் ஒய்வூதியக் கருத்துருக்களை மாநிலக் கணக்காயருக்கு அனுப்ப வேண்டிய அவசியம் எழவில்லை எனவும், எனவே 2003 மற்றும் அதற்குப் பின் வந்த ஆண்டுகளில் ஆசிரியராக நியமனம் பெற்றவர்களுக்கு பணியிலிருந்து ஒய்வு பெறும் நாளுக்கு ஒராண்டிற்கு முன்னர் ஒய்வூதிய கருத்துருக்கள் மாநிலக்கணக்காயருக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும். என்ற நிபந்தனை பொருந்தாது என்பதால் மேற்காண் அரசாணையில் உள்ள அந்நிபந்தனை காரணமாக 2003 மற்றும் அதற்குப் பின்னர் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு மறுநியமன ஆணை வழங்க இயலாத நிலை உள்ளது எனவும், எனவ முற்றிலும் மாணவர்களின் நலன் கருதி, அரசு இதனை மறு பரிசீலனை செய்து, அரசானை ( நிலை) எண் 1643 நாள் 27-10-1988 ல் தற்போதைய சூழ்நிலைக்கு பொருந்தாத

அதவாது பணியிலிருந்து ஒய்வு பெறும் நாளுக்கு ஓராண்டிற்கு முன்னர் ஒய்வூதிய கருத்துருக்கள் மாநிலக்கணக்காயருக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை ஓய்வூதியம் பெறத் தகுதியுள்ளவர்களுக்கு மட்டும் விதித்தும், ஒய்வூதியம் பெறத் தகுதி இல்லாத அதாவது பங்களிப்பு ஓய்வூதிம் பெற தகுதி வாய்ந்த அனைத்து ஆசிரியர்களுக்கும் கல்வியாண்டில் இடையில் வயது முதிர்வு ஒய்வு பெறும் பட்சத்தில் மாணவர்களின் கல்வி நலன் பாதிக்காமல் இருக்கும் விதத்தில் அவர்கள் விருப்பம் தெரிவிப்பின் மற்ற நிபந்தனைகளை கருத்தில் கொண்டு மறுநியமன ஆணை வழங்கி அவர்கள் ஒய்வு பெறுவதற்கு முன்னர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தையே மறுநியமன ஊதியமாக வழங்கலாமென்றும் அதற்கு திருத்திய ஆணை (Amendment ) வழங்குமாறு அரசை வேண்டியுள்ளார்.

3. மேலே பத்தி 2 ல் உள்ள பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துக்களை கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று கீழ்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

1) அரசாணை( நிலை) எண் 1643 கல்வி நாள் 27-10-1988 இல் விதிக்கப்பட்டுள்ள பணியில் இருந்து ஒய்வு பெறும் நாளுக்கு ஒராண்டிற்கு முன்னர் ஒய்வூதிய கருத்துருக்கள் மாநிலக்கணக்காயருக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு ஓய்வூதியம் பெறத் தகுதி இல்லாதவர்களுக்கு (அதாவது புதிய பங்களிப்பு ஒய்வூதியத் திட்டத்தின் கீழ்வரும் ஆசிரியர்களுக்கு) தவிர்ப்பு வழங்கப்படுகிறது.

2) பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ்வரும் ஆசிரியர்களுக்கு மறு பணிநியமனம் அளிக்கும் போது ஒய்வு பெறுவதற்கு முன்னர் கடைசியாக பெற்ற ஊதியமே ( Pay Last Drawn at the time of Retirement) மறு பணிநியமன காலத்திற்கான ஊதியமாக வழங்கப்படும்.

4. இவ்வானை நிதித்துறையின் அ.ச.எண் 55243 / Edn-11/2014 நாள் 17-10-2014 ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்